வனம் இந்தியா பவுண்டேஷன்
பல்லடம்

# வனம் செய்தி மடல்





## பரிசாக வந்த மழைநீர் சேகரிப்பு கருவி!

வனாலயத்தில் 12.11.2019 அன்று நடைபெற்ற வாரந்திர கலந்தாய்வுக் கூட்டத்தில், சர்வதேச அளவில் மழைநீர் சேகரிப்பின் அவசியத்தை வலியுறுத்தி வருபவரும், ஜெர்மனி நாட்டின் கீமிஷிசீ கிநி நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் துறையின் இயக்குநருமான திரு. ரெயின் பிரிட்ஸ் அவர்கள் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டார். ஜெர்மனி தொழில்நுட்பத்தில் உருவான மழைநீர் சேகரிப்புக் கருவியை பரிசாக வழங்கினார். வாராந்திர நாளிதழான ‘தி கோவை மெயில்’ ஆசிரியர் திரு. கே.சி.ஸ்ரீனிவாசன் அவர்களும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றார்.

**அனைவருக்கும் பசுமை வணக்கம்,**

நமது பகுதியைப் பசுமைப் பிரதேசமாக மாற்றுவதுடன், பாரம்பரியக் கலைகளை மீட்டெடுக்கும் புனிதப்பணியையும் வனம் அமைப்பு செய்துவருகிறது. அந்த வகையில் கும்மி ஆட்டத்தை கற்றுக்கொடுக்கும் பயிற்சி வனாலயத்தில் துவங்கியது. 28.10.2019 அன்று நமது நிர்வாகிகள் மற்றும் அறங்காவலர்கள் முன்னிலையில் நமது செயலாளர் இதைத் துவக்கி வைத்தார். திங்கள் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் மாலை 4 மணியிலிருந்து 6 மணி வரை பயிற்சி கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கும்மியாட்ட பயிற்சி ஆசிரியர் திரு. ராமசாமி மற்றும் அவர் மகன் திரு. விக்னேஷ் ஆகியோர் இணைந்து பயிற்சி அளிக்கின்றனர். பெண்கள் மற்றும் சிறுவர்கள் என 186 பேர் பயிற்சியில் கலந்துகொண்டு பயன்பெறுகின்றனர். உடலுக்கும் மனதுக்கும் வளம் சேர்க்கும் இதுபோன்ற இன்னும் பல பயிற்சிகளை வனம் அமைப்பு தொடர்ந்து வழங்க உள்ளது.

**நிர்வாக அறங்காவலர்கள்,**
**வனம் இந்தியா பவுண்டேஷன், பல்லடம்.**

# வனம் நிகழ்வுகள்



முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் நெருங்கிய நண்பரான திரு. விஜயராகவன் அவர்கள் 22.10.2019 அன்று நமது வாராந்திர கலந்தாய்வுக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். வனம் அமைப்பின் செயல்பாடுகள் குறித்து நமது செயல் தலைவர் திரு. கே.பாலசுப்பிரமணியம் அவர்கள் விளக்கினார். வறண்ட நிலத்தில் நெல் விளைவிக்கும் ஏரோபிக் விவசாய முறை (Aerobic Rice Cultivation) பற்றி திரு. விஜயராகவன் விளக்கினார்.

வனம் அமைப்பு, வின் சிட்டி ரோட்டரி கிளப் அமைப்புடன் இணைந்து கரும்புரிபாளையம் குளக்கரையில் 22.10.2019 அன்று பனை விதை நடவு செய்தது. வனம் மனிதவள இயக்குநர் திரு.நடராஜ் அவர்கள் தலைமையில் 100 நாள் வேலைத் திட்ட பணியாளர்கள் இதில் பங்கேற்றனர்.





நமது வனம் நிர்வாகிகள் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் மதிப்புமிகு முனைவர் கே.விஜயகார்த்திகேயன் அவர்களை 24.10.2019 அன்று மாலை சந்தித்து, நமது அமைப்பின் செயல்பாடுகள் குறித்து விளக்கினர். வனம் செயல்படுத்தும் திட்டங்களை பார்வையிட வருமாறு அழைப்பு விடுத்தனர்.

‘பெண்மையைப் போற்றுவோம்’ 6ம் கருத்தரங்கு 25.10.2019 அன்று வனாலயத்தில் நடைபெற்றது. திருமதி. கலாவதி செந்தில்குமார் அவர்கள் ஒளியேற்றி நிகழ்வைத் தொடங்கி வைத்தார். வெற்றி நலவாழ்வு மையம் மற்றும் வனம் அமைப்பின் செயல்பாடுகள் குறித்த காணொளி காட்சிகள் ஒளிபரப்பப்பட்டன. ‘பெண்களின் மன அழுத்தத்திற்கான தீர்வுகள்’ என்ற தலைப்பில் டாக்டர் ஆர்.அறிவழகன் அவர்கள் சிறப்புரை வழங்கினார். பெண்கள் மற்றும் கல்லூரி மாணவிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.







The Dental Foundation’ நிறுவனர் திரு. தியாகராஜன் அவர்களின் துணைவியார் திருமதி. மதுமலர் அவர்களின் தந்தை திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் 25.10.2019 அன்று முக்தி அடைந்தார். அவர் நினைவாக 29.10.2019 அன்று வனாலயத்தில் மரக்கன்று நடப்பட்டு, அவரது குடும்பத்தினரால் பிரார்த்தனை நிகழ்த்தப்பட்டது.



13. வனம் அமைப்பின் செயல் தலைவர் திரு. கே.பாலசுப்பிரமணியம் அவர்கள் 08.11.2019 அன்று சென்னை சவீதா பல்கலைக்கழகம் சென்றார். அங்கு 10 ஆயிரம் மரங்கள் நட்டு அடர்வனம் அமைப்பது தொடர்பாக கள ஆய்வு மேற்கொண்டார்.



வனம் திட்டங்கள் செயல்படும் பகுதிகளில் நிர்வாகிகள் 29.10.2019 அன்று ஆய்வு மேற்கொண்டனர். கௌரவத் தலைவர், செயல் தலைவர், செயலாளர், பொருளாளர், ஊடக இயக்குநர் மற்றும் மரம் வளர்ப்பு – தொழில்நுட்ப இயக்குநர் ஆகியோர் அடங்கிய குழுவினர், செஞ்சேரிமலை கோயில், முத்துநகர், சுல்தான்பேட்டை பி.ஏ.பி அலுவலகம் மற்றும் அருமுத்தாம்பாளையம் ஆகிய பகுதிகளுக்குச் சென்று மரக்கன்றுகளின் வளர்ச்சி மற்றும் பராமரிப்பு பற்றி ஆய்வு செய்தனர்.



திருப்பூர் மாவட்ட ஊரக வளர்ச்சி அமைப்பின் திட்ட இயக்குநர் திரு. ரூபன் சங்கர் ராஜ் அவர்களை வனம் செயலாளர் திரு. ஸ்கை வே.சுந்தரராஜ் மற்றும் இயக்குநர்கள் அடங்கிய குழுவினர் 31.10.2019 அன்று சந்தித்து, வனம் அமைப்பின் செயல்பாடுகள் பற்றி விளக்கினர். வனம் அமைப்பின் செயல்பாடுகளை அவர் வெகுவாகப் பாராட்டினார். அரசுத் தரப்பிலிருந்து தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தருவதாக அவர் உறுதியளித்தார். கௌசிகா நதியில் நிறுவப்பட்ட நீர் சேகரிப்பு முறை மற்றும் மியாவாக்கி முறையில் வளர்க்கப்பட்ட மரங்களின் காணொளியை அவர் திரையிட்டுக் காண்பித்தார்.




# இயற்கை கொடுப்பதைப் பெறுவோம்!

## ‘வான்மழை’ உரை

இயற்கையைப் பசுமையாக்கவும், விவசாயத்தை வளமாக்கவும் நிபுணர்கள் வழிகாட்டும் நிகழ்வு, வான்மழை கருத்தரங்கு. 25.10.19 அன்று வனாலயத்தில் 48ம் வான்மழை கருத்தரங்கு நடைபெற்றது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் முன்னாள் உறுப்பினர், SS Global Venture நிறுவனர், கொங்குமாமணி திரு. வி.ரத்தினசபாபதி அவர்கள் தலைமை தாங்கினார். தேசிய விவசாயிகள் விழிப்புணர்வு இயக்க நிறுவனர் திரு. டி.எஸ்.பிரபுராஜா அவர்கள் சிறப்புரை வழங்கினார். கரூர் முருங்கை விவசாய உற்பத்தியாளர் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர், இயற்கை உழவர் திருமதி. சரோஜா குமாரசாமி அவர்கள் ‘வளம் தரும் மர விவசாயம்’ என்ற தலைப்பில் சிறப்புரை வழங்கினார். நிகழ்வில் பல்லடம் புளூபேர்ட் பள்ளி மாணவன் செல்வன். நிதிஷ் அவர்கள் யோகா செய்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தி பாராட்டுகளைப் பெற்றார்.

சிறப்பு விருந்தினர்களின் உரைகளிலிருந்து...

### திரு வி.ரத்தினசபாபதி


ரத்தினசபாபதி


சரோஜா

வனம் அமைப்பு பல்லடத்துக்கு நல்ல வளம் தர முயற்சிக்கிறது. ஒரு புள்ளிவிவரம் குறிப்பிடுகிறது, கடந்த வருடம் ஏறத்தாழ 48 ஆயிரம் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர். எந்தவொரு மனிதனும் கடைசி மூச்சு வரை வாழவே ஆசைப்படுவான். அப்படியிருக்கும்போது, தன்னைத் தானே மாய்த்துக்கொள்ளக் கூடிய மனநிலை என்பது வார்த்தைகளால் சொல்லவே முடியாது. ஊருக்கெல்லாம் உணவளித்த விவசாயி மாண்டு போகிறான் என்றால் அதைவிடக் கொடுமை வேறு எதுவும் இல்லை. என்னதான் அறிவியல் வளர்ந்தாலும், யாரும் கம்ப்யூட்டரையோ, மெஷினையோ சாப்பிட முடியாது. உணவு இருந்தால்தான் வாழ முடியும். அந்த உணவை உருவாக்கித் தருபவன் விவசாயி. அந்த விவசாயத்துக்கு அடித்தளமாக இருக்கக்கூடிய இயற்கைச் சூழல் பாதுகாக்கப்பட வேண்டுமானால், அதற்கு அடித்தளமாக இருப்பது மரம்தான். மழைக்கு மரமே முக்கிய காரணி. மரம் நீங்களும் நானும் மனித இனமும் வாழ்வதற்கு ஒரு அடித்தளக்காரணி. குறைந்தபட்சம் 25 சதவிகிதம் மருந்துகள், மரங்களிலிருந்தே பெறப்படுகின்றன. நிலத்தடி நீர் பெருக்கத்திற்கும் காரணமாக உள்ளது. இப்படி மரங்களின் பயன்கள் எண்ணற்றவை. மரங்களை அனைவரும் நட்டு வளர்க்க வேண்டும்.

### திருமதி. சரோஜா குமாரசாமி

நானும் எல்லாப் பெண்களையும் போல் திருமணத்துக்குப் பிறகு நல்ல மனைவியாகவும் தாயாகவும் பொறுப்புகளை சுமந்தேன். அப்போதுதான் மருத்துவமனைக்கு போகக்கூடிய பொறுப்பும் வருகிறது. தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா, மாமியார் என்று வரிசையாய் நோயில் விழுந்தபோது மருத்துவமனைக்குக் கூட்டிச் சென்றேன். அங்கே போக வேண்டிய வேலை தொடர்ந்தபடி இருந்தது. அம்மாவைப் பரிசோதனை செய்த மருத்துவர், ‘‘இது பரம்பரை நோய். உனக்கும் வரும், நாளை உன் குழந்தைக்கும் வரும்’’ என்றார். இதைக் கேட்டவுடன் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஏனெனில், சங்க நூல்களில் கேன்சர் போன்ற உயிர்க்கொல்லி நோய் மற்றும் பரம்பரை நோய் என எதைப் பற்றியும் நாம் படிக்கவுமில்லை, கேள்விப்படவும் இல்லை. அப்படியானால் என் குழந்தைக்கு நல்ல உணவு, உடை, கல்வி, பொருளாதாரம் ஆகியவற்றைக் கொடுப்பது மட்டும் என் கடமையில்லை. அவர்களை நோய்களிலிருந்து காப்பாற்றக்கூடிய பொறுப்பும் கடமையும் எனக்கு இருக்கிறது.

‘நாம் சாப்பிடும் உணவுப் பொருள் நஞ்சு, தண்ணீர் நஞ்சு, சுவாசிக்கிற காற்று நஞ்சு’ என்கிறார்கள். அந்த வேளையில்தான் நம்மாழ்வார் என்னும் மனிதரை கவனிக்க ஆரம்பித்தேன். அவர் நடத்திய ‘இயற்கை விவசாயம்’ என்னும் பயிற்சிப் பள்ளிக்குச் சென்றேன். நான் ஐந்து நாள் பயிற்சிக்குத்தான் சென்றேன். அது என் வாழ்க்கைப் பயணத்தையே மாற்றி விட்டது. ஐயாவின் வாழ்வியல் என்னவென்றால், இயற்கைக்குத் திரும்புவது. ‘எவன் ஒருவன் குறைவாக நுகர்வு செய்கிறானோ, அவனே போற்றத் தகுந்தவன்.’ ஒரு சாக்லேட் வாங்கி சாப்பிட்டால்கூட அந்தப் பேப்பரை கீழே போட வேண்டிதாய் இருக்கிறது. இப்படி நாம் தினமும் பயன்படுத்தும் பொருள்களில் எத்தனைக் கழிவுகள் மண்ணுக்கேடாய் கீழே போட வேண்டிய நிலை உள்ளன! பாத்திரம் தேய்ப்பதற்காக என் வீட்டில் அரப்பு ஆட்டி வைத்துள்ளேன். அதற்கான சோப்பு வாங்கிப் பயன்படுத்தும்போது என் கைகளுக்கும் கெடுதல்; அதன் உறை மற்றும் டப்பாவை கீழே போட்டால் சூழலுக்கும் கெடுதல். என் குழந்தைகளுக்கு சுத்தமான பூமியை விட்டுச்செல்ல வேண்டும் என்பதால் என்னால் முடிந்தவரை நுகர்வுகளைக் குறைக்க ஆரம்பித்தேன்.

எங்களுக்குக் கொஞ்சம் நிலம் இருந்தது. அதில் விவசாயம் செய்யலாம் என்று நினைத்தேன். என் தாத்தா காலத்தில் காட்டுவெள்ளாமை என்பார்கள். வறட்சியான பகுதி என்பதால் சோளம், கம்பு, உளுந்து, தட்டாம்பயிறு என மானாவரி பயிர் செய்வார்கள். விளைச்சலை வீட்டில் கொண்டுவந்து மூட்டையாக வைத்துக் கொள்வார்கள். எப்போது என்ன தேவையோ, அதை எடுத்துப் பயன்படுத்திக் கொள்வார்கள். கல்யாணம், காட்சி என்றால் கூட கடைக்குச் செல்வதில்லை. என் திருமணம்கூட வீட்டில்தான் நடந்தது. இது காடுகளில் இருந்து கிடைக்கும் வெள்ளாமை.

வயல்களில் கொஞ்சம் நீர் பாய்ச்சினாலும் போதும்... காய்கறி, கீரை என வீட்டுக்குத் தேவையானது வந்து விடும். பச்சை மிளகாய், தக்காளி, கொத்தமல்லி எல்லாம் இருக்கும். தேவையானதைப் பறித்து ரசம் வைப்பார்கள். வீட்டுக்கு வெளியில் பூசணிக்காய் இருக்கும். சித்திரை மாதம் வரை அதை உணவாக சமைப்பார்கள், இப்படி எல்லாமே வீட்டில் இருந்தது. அந்த ருசி இப்போது நான் என்ன செய்தாலும் கிடைப்பதில்லை. சந்தைக்கு போனால் சர்க்கரை, காபித்தூள், வெற்றிலை பாக்கு மட்டும்தான் வாங்குவோம். இப்படி இயற்கையோடு வாழ்ந்த காலம் போய், பணத்திற்காக விவசாயம் செய்யத் தொடங்கிவிட்டோம். இதில் விவசாயிகளைக் குறைகூற முடியாது. அவர்கள் கார்ப்பரேட் கம்பெனிகளால் சிக்க வைக்கப்பட்டுள்ளனர்.

‘வருவாய் தரக்கூடியதாகவும் இருக்க வேண்டும். அதே சமயம் மோசமான விளைவுகள் இல்லாத விளைச்சலாகவும் இருக்க வேண்டும்.’ கொடுக்காப்புளி, இலந்தை போன்ற மரங்களை வளர்க்க முடிவு செய்தேன். வெண்டைக்காய் குழம்புக்கு பதிலாக அத்திக்காய் குழம்பு வைக்க வேண்டும். கத்தரிக்காய் குழம்புக்கு பதிலாக இச்சிக்காய் எடுத்து குழம்பு வைக்க வேண்டும். ஒருமுறை அசாம் போக வேண்டிய வாய்ப்பு கிடைத்தது. அங்கு ரோட்டோரம் விளைந்து கிடந்தது முட்டைக்கோஸ். அதைக் கொண்டு வந்து நம் ஒட்டன்சத்திரத்தில் விளைவிப்பது எவ்வளவு பெரிய முட்டாள்தனம். நம் பயிர்கள் கோவைக்காய், முருங்கை, பிரண்டை போன்றவைதான். எங்கள் நிறுவனத்தில் பிரண்டையில் ஜாம் செய்திருக்கின்றனர். மருத்துவம் படிக்கும்



மாணவர்கள் கேட்டு வாங்கிப் போகிறார்கள்.

நான் இதுபோன்ற மரங்களை நடப்போகிறேன் என்பதை வீட்டில் சொன்னபோது கடுமையாக எதிர்ப்பு வந்தது. தேக்கு, சந்தனம் போன்ற மரங்களை நட வேண்டும் என்றனர். இவை லாபம் தரக்கூடியவைதான். ஆனால் என் தோழியைப் பார்க்கப் போகிறேன் என்றால் அவளுக்கு இந்த மரங்களைக் கொடுக்க முடியுமா? உலர்ந்த அத்திப் பழம் கிலோ ஆயிரம் ரூபாய்க்கு விற்கிறது. அத்திப் பழத்தைக் கொடுத்து, ‘‘இதைக் குழந்தைகளுக்குக் கொடு’’ என்றால், அவள் எவ்வளவு சந்தோஷப்படுவாள்!

இந்த விளைச்சலின் மதிப்பை நாம் கூட்டலாம். ஏனெனில், ‘எந்த மரத்திலிருந்து எந்த உணவு கிடைக்கும்? அதை எப்படிப் பயன்படுத்தலாம்’ என்பதுகூட தெரியாத ஒரு கூட்டம் உள்ளது. அவர்களுக்கெல்லாம் இந்த சத்தான உணவுப்பொருள்களைக் கொடுத்து எப்படி காசாக்கலாம் என்பதை விவசாயிகளுக்கு நாம் கற்றுத் தர வேண்டும்.

முருங்கை இலையை நாங்கள் பொடி செய்து விற்கிறோம். 7 கிலோ முருங்கை இலையைக் காய வைத்து அரைத்தால், 1 கிலோ பொடி கிடைக்கிறது. மீதம் ஆறு கிலோ என்ன? வெறும் தண்ணீர். நாம் ஒவ்வொரு பொருளை விற்பனை செய்யும்போதும், கூடவே நம் தண்ணீரையும் விற்பனை செய்துள்ளோம். அப்படி விற்பனை செய்து நாம் நன்றாக இருக்கிறோமா என்றால், இல்லையே! 5 ரூபாய் வெண்டைக்காய்க்கு 500 லிட்டர் தண்ணீர் எடுத்து விளைய வைத்துள்ளோம். எது சொத்து? காரும், வீடும் சொத்தா? இல்லையே! மண்ணும் தண்ணீரும்தான் நம் சொத்து. அவற்றைக் காப்பாற்ற ஒரு விவசாயியாக என்ன செய்ய வேண்டும் என சிந்தித்தேன். அதனால் இப்படி முடிவெடுத்தேன்.

எனக்கு களை வெட்டும் வேலை இல்லை, உழவு ஓட்ட வேண்டிய வேலையில்லை. காட்டுக்குச் சென்று கிடைப்பதை சேகரித்து வருவது மட்டும்தான் என் வேலை. எனக்கும் அது முதலீடு ஈட்டுவதாக இருக்க வேண்டும். வாங்குபவருக்கு மருந்தாகவும் உணவுப்பொருளாகவும் பயன்பட வேண்டும். குழந்தையின்மைக்கு இன்று எத்தனையோ பேர் ஒவ்வொரு மருத்துவமனையாக சென்று பார்க்கிறார்கள். அவர்களுக்கு முருங்கை எண்ணெயை பரிந்துரை செய்கிறோம். ஒரு லிட்டர் 5 ஆயிரம் ரூபாய். ஒரு நாளைக்கு ஒரு ஸ்பூன் என்று சாப்பிட்டு வந்தால் ஆண்களுக்கு உயிரணு எண்ணிக்கைக் கூடும். பெண்களுக்கு சீரற்ற மாதவிடாய் சுழற்சி சீராகும். சின்னக்குழந்தைக்குக்கூட கொடுக்கலாம். ஜலதோஷம் பிடிக்காது. காய்ச்சல் வராது. முருங்கை எண்ணெய் போன்ற மருந்துப் பொருட்களையும் உணவுப்பொருட்களையும் தயார் செய்து கொடுக்கிறேன்.

நம் முருங்கை விதை ஜெர்மன் போய், மருந்தாக ஃபார்மா கம்பெனி மூலம் திரும்பி வருகிறது. மூட்டு வலி என்று எலும்பு மருத்துவரிடம் போனால் அவர் எழுதிக்கொடுக்கும் மாத்திரையில் இது இருக்கிறது. அரை கிராம் பொடி அளவுள்ள மாத்திரை 360 ரூபாய். எங்கள் ஊர் முருங்கை விதை ஒரு கிலோ 200 ரூபாய் என வெளிநாட்டுக்குப் போய், நமக்கு ஏழு லட்ச ரூபாயாகத் திரும்பி வருகிறது. நம் நாட்டில் விளையும் பொருள், நமக்கு எளிமையாகக் கிடைக்கும் பொருள். அதைப் பயன்படுத்த நமக்குத் தெரியவில்லை.

இயற்கையை சிதைக்காமல் மரங்களை எப்படிப் பயன்படுத்துவது என நம் குழந்தைகளுக்குக் கற்றுத் தர வேண்டும். மரங்கள் உழைக்காமலே இருக்க இடம் தரும், உண்ண உணவு தரும், சுவாசிக்க காற்று தரும். அனைவரும் மரம் வளர்ப்போம்... மகிழ்ச்சியாய் அன்போடு வாழ்வோம்!



# வனாலயத்தில் பிரமிடு தியான அரங்கம் பொது நன்கொடைத் திட்டம்



நம் பல்லடம் பகுதியின் புறச்சூழலைப் பசுமையாக்கும் பணிகளை முன்னெடுத்து தீவிரமாக இயங்கி வருகிறது வனம் இந்தியா பவுண்டேஷன். கூடவே, மக்களின் அகச்சூழலைப் புனிதமாக்குவதற்காக பிரமிடு தியான அரங்கை வனாலயத்தில் நிறுவும் ஒரு பெரும் முயற்சியை இயற்கையின் கருணையோடும், மகான்களின் ஆசிகளோடும், உங்களது ஆதரவோடும் எடுக்கிறது.

இந்த பிரமிடு தியான அரங்கம் சமயச்சார்பு அற்றது. எந்த மார்க்கத்தைப் பின்பற்றுபவரும் இந்த பிரமிடு அரங்கத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். நம் பகுதியில் உள்ள ஆன்மிக அமைப்புகள், தன்னார்வலர்கள், தியானம் செய்ய விரும்பும் தனி நபர்கள், தொழிலதிபர்கள், பணியாளர்கள், இல்லத்தரசிகள், மாணவர்கள் என அனைத்து தரப்பினருக்கும் பயனளிக்க போகும் அதி உன்னதமான கட்டிடமே பிரமிடு தியான அரங்கம். நம் பகுதிக்கே பெரும் மாற்றத்தை அருள இருக்கிறது இந்த பிரமிடு தியான அரங்கம்.

வனாலயத்தில் இந்த பிரமிடு தியான அரங்கைப் போலவே கலையரங்கம், நாற்றுப் பண்ணை, இயற்கை உணவுக் கூடம், வாழ்வியல் ஆலோசனை மையம், குழந்தைகளுக்கான பாரம்பரிய விளையாட்டுத் தளம் போன்றவை உருவாக உள்ளன.

இதற்கெல்லாம் நாம் அனைவரும் பணமாக, பொருளாக, உழைப்பாக, ஆலோசனையாக என எவ்வாறெல்லாம் பங்களிக்க முடியுமோ, அவ்வாறெல்லாம் நம் பங்களிப்பைச் செலுத்துவோம். நாளைய பல்லடம் அமைதிப்பூங்காவாக உருவாக வனாலயமும், இங்கு அமையும் பிரமிடு தியான அரங்கமும் நிச்சயம் துணை புரியும்.

**வங்கிக் கணக்கு:**
**Vanam India Foundation**
**Canara Bank**
**Palladam Branch**
**A/C No: 1213201007621**
**IFSC: CNRB0001213**

**நீங்கள் அளிக்கும் நன்கொடைக்கு 80ஜி பிரிவின்படி வருமான வரி விலக்கு உண்டு.**
**தொடர்புக்கு:**
**87540 36183**

# வரமாக வளரும் மரம்!

**திருமண நாள், பிறந்த நாள், நினைவு நாள்... இப்படி வாழ்வின் முக்கிய தினங்களில் வனாலயத்தில் மரக்கன்று நடுவதற்காக ‘மரம் ஓர் வரம்’ என்ற திட்டத்தை வனம் இந்தியா பவுண்டேஷன் அறிமுகம் செய்துள்ளது. நூற்றுக்கணக்கானவர்கள் இதில் இணைந்து மரம் நட்டிருக்கிறார்கள். ரூ.1,500 செலுத்தி மரக்கன்று நடலாம். இதை வனம் அமைப்பு மூன்று ஆண்டுகளுக்குப் பராமரிக்கும்.**

1. ஏ.வி குழுமத்தின் தலைவர் திரு. வரதராஜன் ஐயா அவர்களின் 85வது பிறந்தநாளை முன்னிட்டு 31.10.2019 அன்று வனாலயத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன. அன்று வனம் அமைப்பில் மரங்காவலர்களாக இணைந்த திரு. யுவராஜ்–திருமதி. சிவசரண்யா தம்பதியினரும் மரக்கன்று நட்டு மகிழ்ந்தனர்.

2. வெள்ளக்கோவில் திரு. கே.தங்கமுத்து–திருமதி. ஆர்.பிரதீபா தம்பதி மற்றும் மகள் டி.தர்ஷிகா ஆகியோர் இணையத்தின் வழியே பணம் செலுத்தி ‘மரம் ஓர் வரம்’ திட்டத்தில் வனாலயத்தில் மரக்கன்று நட்டுப் பராமரிக்கக் கேட்டுக்கொண்டனர். 02.11.2019 அன்று அவர்கள் சார்பில் வனம் விரிவாக்கத் துறை இயக்குநர் திரு. கே.எம்.ஈஸ்வரமூர்த்தி, திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. முருகேசபாண்டியன் ஆகியோர் மரக்கன்று நட்டனர்.

3. என்.டி.சி குழும நிறுவனர் திரு.சந்திரமோகன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 03.11.2019 அன்று வனம் விரிவாக்க இயக்குநர் திரு. கே.எம். ஈஸ்வரமூர்த்தி தலைமையில் வனம் பணியாளர்கள் இணைந்து வனாலயத்தில் மகாகனி மரக்கன்று நட்டு, மனதார வாழ்த்தி மகிழ்ந்தனர்.

4. சென்னை திரு. ராமச்சந்திரன் கணேசன் இணையத்தின் வழியே மரம் நட ரூ. 1,500 நன்கொடை அளித்ததை ஏற்று, 06.11.2019 அன்று வனாலயத்தில் நமது செயலாளர் திரு. ஸ்கை வே.சுந்தரராஜ் முன்னிலையில் மரம் நட்டு வாழ்த்தி மகிழ்ந்தனர்.

5. வனம் அமைப்பின் மரங்காவலர் சூலூர் திரு. எம்.ரங்கசாமி அவர்கள் மகள் செல்வி. ஆர்.சௌமியாவின் 21வது ஆண்டு பிறந்த தினத்தை முன்னிட்டு 09.11.2019 அன்று வனாலயத்தில் மரக்கன்று நட்டனர்.

6. ஒடக்காடு பகுதியைச் சேர்ந்த திருமதி. சிந்துஜா மற்றும் அவருடைய மகள் ஆகியோர் வனாலயத்துக்கு வருகை தந்து 11.11.2019 அன்று ‘மரம் ஓர் வரம்’ திட்டத்தில் மரக்கன்று நட்டு மகிழ்ந்தனர்.

7. திருப்பூர் ஜெய் ஸ்ரீராம் பொறியியல் கல்லூரி பேராசிரியர் முனைவர் ஆ.பெரமணன், 13.11.2019 அன்று வனம் அமைப்பின் மரங்காவலராக இணைந்தார். ‘மரம் ஓர் வரம்’ திட்டத்தின் கீழ் வனாலயத்தில் மரக்கன்று நட்டார். இந்நிகழ்வில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக பயிற்சி மணவர்களும் கலந்துகொண்டனர்.


## மரம் ஓர் வரம்

**இணையத்தின் வழியே பசுமை முயற்சி**

பிறந்த நாள், திருமண நாள், முன்னோர்களின் நினைவு நாள் போன்ற உங்கள் வாழ்வின் முக்கிய தினங்களில் மரம் நட ஆசைப்படுகிறீர்களா? வனம் இந்தியா பவுண்டேஷன் Seed a Life என்ற இணையத்தின் வழியே மரக்கன்று நட்டு பசுமையைப் பரப்பும் நன்கொடைத் திட்டத்தை அறிமுகம் செய்கிறது.

**நீங்கள் உலகில் எங்கு இருந்தாலும், உங்களுக்காக மரம் நட்டு, மூன்று ஆண்டுகள் பராமரிப்பும் பாதுகாப்பும் அளிக்கிறோம்.**

**வனம் இந்தியா பவுண்டேஷன்** 87540 36183 trustvanam@gmail.com

நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றுதான்... இந்த QR codeஐ scan செய்து இணையத்தின் மூலம் பசுமையை வளர்த்திடுங்கள்.





1


5


2


6


3


7


4

## உங்கள் பங்காக எப்போது மரம் நடப் போகிறீர்கள்?





**வ**னம் அமைப்பின் செயலாளர் திரு. ஸ்கை வே.சுந்தரராஜ் மற்றும் நிர்வாகிகள் இணைந்து 03.11.2019 அன்று அலங்கியம் பி.கே ஃபார்ம்ஸ் திரு.ஆறுமுகத்தை சந்தித்தனர். இயற்கை வேளாண்மை முறையில் அமைக்கப்பட்ட அவரது தோட்டத்தையும் பார்வையிட்டனர். அமராவதி நதியும், சண்முக நதியும் இணையும் இடத்தில் பசுமையான சூழ்நிலையில் தோட்டம் அமைந்துள்ளது. இயற்கை முறையில் பயிரிடப்பட்ட மரங்கள் மற்றும் இயற்கை உரம் மூலம் பராமரிக்கும் முறையை அவர் விளக்கினார். தாவரவியல் விஞ் ஞானி திரு.மாணிக்கம் அவர்கள், அங்குள்ள தாவரங்கள் பற்றி எடுத்துக் கூறினார்.

**ஓ**ய்வுபெற்ற ஐ.ஆர்.எஸ் அதிகாரி திரு. ராமலிங்கம் அவர்கள், ‘சூலூர் பூந்தோட்டம்’ எனும் பெயரில் தோட்டம் அமைத்து மருத்துவ குணங்கள் நிறைந்த செடிகளையும் மரங்களையும் பயிரிட்டுப் பராமரித்து வருகிறார். 03.11.2019 அன்று வனம் செயலாளர் திரு. ஸ்கை வே.சுந்தரராஜ், இணை செயலாளர் திரு. உதயகுமார் அடங்கிய குழுவினர், சூலூர் சென்றனர். திரு. ராமலிங்கம் அவர்களை சந்தித்து வனம் செயல்பாடுகளை விளக்கினர். தான் வளர்க்கும் மரங்கள் மற்றும் செடிகளைக் காண்பித்த அவர், பல்வேறு மரம் வளர்ப்பு முறைகளையும் நோக்கங்களையும் பகிர்ந்துகொண்டார்.





**தி**ருப்பூர் மாவட்ட ஆட்சியர் முனைவர் கே.விஜயகார்த்திகேயன் தலைமையில் 07.11.2019 அன்று நடைபெற்ற ‘ஜல் சக்தி அபியான்’ நீர் மேலாண்மை கலந்தாய்வுக் கூட்டத்தில் வனம் நிர்வாகிகள் கலந்துகொண்டனர். கைபேசியில் ‘ஜல் சக்தி அபியான்’ செயலியை நிறுவி, மரம் நடவு, மழைநீர் சேகரிப்பு செயல்பாடுகள் போன்றவற்றை அரசு வலைதளங்களில் பதிவேற்றும் வசதி விரைவில் தொண்டு நிறுவனங்களுக்கும் அளிக்கப்படும் என்று கூறப்பட்டது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு. ரூபன் சங்கர் ராஜ் அவர்களை, வனம் அமைப்பின் நிதி மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. துரைசாமி அவர்கள் சந்தித்தார். ‘வனம் திட்டப் பகுதிகளில் மரக்கன்றுகள் பராமரிப்புப் பணியில் 100 நாள் திட்ட வேலையாட்களின் பங்களிப்பைத் தருமாறு’ வேண்டி கடிதம் அளித்தார்.





**கா**ஞ்சிபுரம் அருகே காவேரிப்பாக்கத்தில் 50 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள என்.டி.சி நிறுவனத்தின் Storage இடத்தை வனம் செயல் தலைவர் திரு. கே.பாலசுப்பிரமணியம், ஆலோசகர் திரு. முத்துசாமி IRS (Rtd.), என்.டி.சி சேவை மைய துணைத் தலைவர் திரு.முத்துசாமி மற்றும் என்.டி.சி அருண்குமார் ஆகியோர் 07.11.2019 அன்று பார்வையிட்டனர். அங்கு மியாவாக்கி முறையில் மரம் நட்டு அடர்வனம் அமைக்க ஆய்வு செய்யப்பட்டது.




**வ**னம் அமைப்பு மூலம் கொங்கூர் கிராமத்தில் உக்கிரகாளியம்மன் கோயில் அருகிலுள்ள நிலத்தில் 1,300 மரக்கன்றுகள் நடும் விழா, 08.11.2019 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் கொங்கூர் கிராம பிரமுகர்கள், அரசுப் பணியாளர்கள், வனம் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர். திருப்பூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு. ரூபன் சங்கர் ராஜ் அவர்கள் தலைமையேற்று மரக்கன்று நட்டு விழாவைத் தொடங்கி வைத்தார். ரிளிழிநிஹிஸி ஜிணிஙீஜிமிலிணி றிஸிளிசிணிஷிஷி நிறுவனர் திரு. பி.கே.ஆறுமுகம் அவர்கள், வனம் அமைப்பின் அறங்காவலராக தன்னை இணைத்துக்கொண்டார். விழாவில் பங்கேற்ற அனைவரும் மரக்கன்றுகளை நடவு செய்தனர்.



**பெ**ங்களூரு ஹிமாலயா நிறுவன நிர்வாகிகள் திரு. சிவக்குமார் மற்றும் திரு. சன்னிதி பிரனித் ஆகியோர் 12.11.2019 அன்று வனாலயத்துக்கு வந்து வனம் செயலாளர் திரு. ஸ்கை வே.சுந்தரராஜ் மற்றும் இயக்குநர்களுடன் கலந்துரையாடினர். ஒவ்வொரு மாதமும் சுமார் 1,000 டன் உலர்ந்த வேப்ப இலைகளைக் கொள்முதல் செய்ய விரும்புவதாகக் கூறினர். அன்றே அதற்கான பூர்வாங்கப் பணி நமது செம்மிப்பாளையம் மற்றும் பி.கே.எஸ் தோட்டப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது.






# கலங்கல் கிராமத்தில் உருவாகும் வனம்!

வனம் இந்தியா பவுண்டேஷனும், கலங்கல் கிராம வனம் கிளையும் இணைந்து அங்கு அடர் வனம் உருவாக்குகின்றன. இதற்காக கலங்கல் அருள்மிகு நாகதேவன் குரும்பிச்சியம்மன் கோயில் வளாகத்தில் 4,500 மரக்கன்றுகள் நடும் விழா 10.11.2019 அன்று பிரமாண்டமாக நடைபெற்றது.

பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகளுடன் தொடங்கிய இவ்விழாவில் கோவை மாவட்ட ஆட்சியர் திரு. கே.ராஜாமணி ஐ.ஏ.எஸ் அவர்கள் தலைமையேற்றார். கலையுலக மார்க்கண்டேயன் திரு. சிவகுமார் அவர்கள் சிறப்புரையாற்றினார். வனம் நிர்வாகிகள், கலங்கல் வனம் அமைப்பின் உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள், பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், ஆர்.ஏ.எஃப் உயரதிகாரிகள் மற்றும் படையினர், பொதுமக்கள் என பெரும் திரளானோர் கலந்துகொண்டனர்.

வனம் அமைப்பின் அறங்காவலர்களாக இணைந்தவர்களுக்கு இந்த விழாவில் 'வனம் உறுப்பினர் பட்டயம்' வழங்கி சிறப்பிக்கப்பட்டது. கலங்கல் வனம் பெயர்ப் பலகையை யு.எம்.எஸ் குழும நிர்வாக இயக்குநர் திரு. ஜி.டி.ராஜ்குமார் அவர்கள் திறந்து வைத்தார். அனைத்து விருந்தினர்களும் கலங்கல் மக்களும் இணைந்து மரக்கன்றுகள் நட்டனர்.



Vanam India Foundation,
Vanalayam, SF No:1/3, Tiruchy Main Road, Kalivelampatti Post, KSN Puram, Opp.to Kongu Kalyana Mandapam,
Palladam - 641662, Tirupur District. email: trustvanam@gmail.com, Mobile:8754036471.